**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2015**

---

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்தின் 25 மற்றும் 27 ஆம் பிரிவுகள் | அதிகாரச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சி நிறுவனங்களின் வருடாந்தக் கணக்குகளின் பிரதிகள் சபைக்கு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் அதிகாரச்சட்டத்தின் 27(1) (அ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதைப் புறக்கணிக்கின்ற அல்லது மீறும் நபர்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் தவறிழைத்தவராகின்றமையால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2014 இன் நிதியாண்டிற்குரிய 17 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சி நிறுவனங்கள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தமது கணக்கு அறிக்கைகளை சபைக்கு வழங்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | சபையினால் மனித வள முகாமைத்துவம் தொடர்பில் விதிகள் மற்றும் பிரமாணங்களை தயாரிப்பதற்குரிய செயல்நடைமுறைக் கையேடொன்றை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்தக் கைநூல் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, சபையின் பிரதான வருமானமான அரசாங்க மானியம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 8,229,302 இனால் அதாவது 13 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அதில் செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினங்களும்

அதற்கு சமமாக அதிகரித்திருந்தது. மூலதன செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்ட மானியம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 790,812 இனால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்தின் 23 அவது பிரிவின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சி நிறுவனங்களின் மூலம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்படுகின்றமையை பரீட்சீப்பது சபையின் பிரதான பணியாகும்.

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் படி, மீளாய்வாண்டிலும் கடந்த 05 ஆண்டுகளினுள் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| ஆண்டினுள் கிடைத்திருந்த நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 1,430 | 1,371 | 1,322 | 1,443 | 1,716 |
| மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 1,122 | 1,200 | 751 | 302 | 213 |
| கிடைத்திருந்த நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கையின் சதவீதமாக மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 78 | 87 | 57 | 21 | 12 |
| மீளாய்வில் பங்குபற்றிய தொழில்நுட்ப பதவியணியினர் | 13 | 14 | 13 | 06 | 06 |
| அந்தந்த வருடங்களில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 86 | 86 | 58 | 50 | 35 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு மீளாய்விற்காக கிடைத்த நிதிக்கூற்றுக்களில் 2011 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட செயல்முன்னேற்றம் 12 சதவீதமாக இருந்த போதிலும், அதன் பின்னர் வருடாந்தம் அந்த செயல்முன்னேற்றம் சீராக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் கிடைத்த நிதிக்கூற்றுக்களில் 87 சதவீதம் மீளாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது அது 78 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. ஒவ்வொரு வருடமும் மீளாய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும், சகல வருடங்களிலும் கவனத்திற் கொள்ளக்கூடிய அளவொன்று மீளாய்விற்கு உட்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதற்காக எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு பொருத்தமான திட்டமுறையொன்று தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வெளி மீளாய்வாளர்களினால் கணக்கு அறிக்கைகள் தொடர்பாக ஆரம்ப மீளாய்வொன்றும் உள்ளக உத்தியோகத்தர்களினால் நீண்ட மற்றும் இறுதி மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது அந்த மீளாய்வு தொடர்பாக நேரடியாக மேற்கொள்ளப்பட்ட மொத்தக் கிரயம் (பதவியணியின் வேதனம், ஊக்குவிப்புப் படி, மற்றும் வெளி மீளாய்வாளர்களுக்கு

வழங்கப்பட்ட கொடுப்பனவு) மற்றும் அலகுக்கிரயம், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 4,474 இனால் அதிகரித்திருந்தது. அது சதவீதமாகக் காண்பிக்கப்படுமாயின் 20 சதவீதமாகும்.

(இ) மீளாய்வாளர்களுக்கு அறிக்கை வழங்கப்பட்டு 14 நாட்களுக்குள் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 12 சந்தர்ப்பங்களில் அவதானிப்புக்களை வழங்குதல் 17 நாட்கள் முதல் 86 நாட்கள் வரையிலான காலதாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பரீட்சிக்கப்பட்ட 17 கோவைகளில் 13 கோவைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்குரிய நிறுவனங்கள் எவ்வித கருத்துக்களையும் தெரிவித்திருக்கவில்லை. அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள், நியதிச்சட்ட வழிகாட்டல்கள் காண்பிக்கப்படாமையினால் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கப்படும் என சபை கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்புப் நல்லாளுகையும்

### 5.1 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2012 செப்தெம்பர் 19 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்தின் போது பொதுமக்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துமாறு சபைக்கு கட்டளையிடப்பட்டிருந்ததுடன் 2015 – 2019 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தில் அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்

சபையின் பிரதான பணி நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதாக இருந்த போதிலும், நிதி அறிக்கைகளைப் பெறல், மீளாய்விற்கு உட்படுத்துதல் அறிக்கை / அவதானிப்புக்களை சமர்ப்பித்தல் மற்றும் அதற்குரிய சீராக்கங்கள் போன்ற பணிகள் தொடர்பாகவும் மீளாய்வாளர்களைத் தெரிவு செய்தல், அதற்குரிய கொடுப்பனவுகளை செய்தல் மற்றும் ஊக்குவிப்புப் படிகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி முறையான கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையொன்றை பேணிச் செல்வதற்கும் பராமரிப்பதற்கும் சபை தவறியிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்காக அரையாண்டு அறிக்கை சமப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வாளரால் இறுதி அரையாண்டு அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ1/4/6/11 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், சபைக்காக 20 நிரந்தர பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தை உள்ளடக்கிய உயர் முகாமைத்துவத்திற்குரிய 05 பதவிகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மேற்கூறப்பட்ட கடிதத்தின் பிரகாரம், சபையின் ஒட்டுமொத்த பதவியணியினருக்காகவும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் 04 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---------------------------------------

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.